25.05.2010

திரு வி சி குகநாதன் அவர்கள்
தலைவர்
தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம்
சென்னை

மதிப்பிற்குரிய ஐயா அவர்கட்கு வணக்கம்.

**கொழும்பில் நடைபெறவுள்ள அனைத்துலக இந்திய திரைப்பட விழா**

இவ்வாண்டுக்கான அனைத்துலக இந்திய திரைப்பட விழாவை வருகிற ஆனி மாதம் 4, 5, 6 ஆம் திகதிகளில் இலங்கையில் நடாத்த அனைத்துலக இந்திய திரைப்பட விழா நிர்வாகிகள் முடிவு செய்து, அதற்கான முயற்சிகளில் துரிதமாக ஈடுபடுவதறிந்து மிக வேதனை அடைகிறோம். அதே நேரம் அதற்குத் தங்கள் சம்மேளனமும், ஏனைய தென்னிந்திய சினிமா அமைப்புகளும் வலுவான எதிர்ப்பைத் தெரிவித்து வருவது எமக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

அனைத்துலக திரைப்பட விழாக்களுக்கோ, விளையாட்டுப் போட்டிகளுக்கோ நாம் எதிரானவர்கள் அல்ல. சில ஆண்டுகளுக்குமுன், நிற வேறுபாடுகாட்டிப் பெரும்பான்மையின மக்களை அடக்கி ஆண்ட தென் ஆபிரிக்காவுக் கெதிராக உலக நாடுகள் கூட்டாக எடுத்த முயற்சிகளின் விளைவாகவே தென் ஆபிரிக்க மக்கள் இன்று சுதந்திரம் பெற்று நல்வாழ்வு வாழ்கின்றனர். ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்றாம் ஆண்டுவரை மலர்ந்திருந்த தமிழ் இராச்சியத்தைப் பிரித்தானியர் சிங்கள இராச்சியத்துடன் இணைத்துத் தாம் இலங்கையைவிட்டுப் போகும்போது 1948 ஆம் ஆண்டில் சிங்களவர்களிடம் தாரைவார்த்துக் கொடுத்துச் சென்றனர். சிங்களவர் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்தித் தமிழ் இராச்சிய நிலத்தை ஆக்கிரமித்துச் சிங்கள மயமாக்க முயற்சிக்க, அதைத் தடுக்க முனைந்த தமிழினத்தைச் சென்ற வருடம் வைகாசி மாதம் கொன்று குவித்துக் குதூகலித்தனர். அனைத்துலகமும் அமைதியாயிருந்து தமிழின அழிவிற்குத் துணைபோயின. இவ்விடத்தில் மாட்டின் லூதர் கிங் அன்று எடுத்தியம்பிய "மனித இனத்தின் அழிவு சிலரின் கொடுங் கோன்மையாலல்ல, அதைக் கண்டும் அமைதியாயிருப்போராலேயே" என்ற வாசகம் நினைவு வருகின்றது.

தொடர்ந்து வெளிவரும் சான்றுகள் சிங்கள அரசின் கொடுங் கோன்மைத் தன்மையை வெளிக் கொணர்ந்து, சென்ற வருடம் வைகாசி மாதம் இலங்கையில் நடைபெற்றது சிங்கள அரசின் வேண்டுமென்ற தமிழ் இனப் படுகொலையே என உறுதிப்படுத்துகின்றன. அதனால் அனைத்துலகமும் இலங்கைச் சிங்கள அரசின்மேல் மனித அழிப்புக் குற்றம் சுமத்துகிறது. இந்த நேரத்தில் இந்திய அனைத்துலகத் திரைப்பட விழாவை இலங்கையில் நடாத்துவது அவர்களது தமிழின வேட்டையை ஆதரிப்பதுபோலமையும். எனவேதான் நாம் அந்நிகழ்வு இலங்கையில் நடைபெறக் கூடாது என்று முழுமையாக எதிர்க்கிறோம்.

அவ் எதிர்ப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள உங்கள் எல்லோருடன், நாமும் கை கோர்த்து எமது முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்.

என்றும் ஒற்றுமையுடன்
"பிரித்தானியா" ஈழவர் திரைக்கலை மன்றம், London Baba`s Super Hit Creations, United British Sunshine Creations, S S Movies UK limited, K உதயம் பிலம்ஸ், ராஜ ராஜேஸ்வரி கம்பைன்ஸ். "பிரான்ஸ்" நல்லூர்ஸ்தான், மின்படிமங்கள், அகரம் படைப்பகம், கள் படைப்பகம், தமிழாள் கூத்தவை, அவதாரம், ISS, ராணி படைப்பகம், அகேனம் படைப்பகம், மின்தூரிகை, தமிழர் கலைபண்பாட்டுக் கழக திரைப்படப்பிரிவு. "நோர்வே" N T Picture, வசீகரன் இசைக்கனவுகள், தமிழியம், இளம் தழிழ் படைப்பகம், புலத்தமிழ் திரைக்குழு. "கனடா" பகவன். "டென்மார்க்" Alaikal International, Shan's International. "ஜேர்மனி" கலைக்கண், MMT Pictures. "சுவிஸ்" S Ramanan`s Film. "ஒல்லாந்து" Joy Film & Video.